கலென்பிந்துனுவெவ பிரதேச சபை
அனுராதபுர மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 14 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வீதவரி ஆவணங்கள் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையிலிருந்த வீதவரி தொகை ரூபா 2,425,881 பெறுமதியாக இருந்த போதிலும் பேரேட்டு மீதியில் ரூபா 4,323,778 பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 1,897,897 பெறுமதி கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சரியான வீதவரி நிலுவை இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | வீதவரியை மதிப்பிட்டிருக்கும் விதத்தால் சிக்கல்கள் எழுந்துள்ளன. |
| (ii) | ஊழியர் பிணை வைப்பு ரூபா 71,583 பெறுமதியான தொகை நடைமுறைப் பொறுப்புகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கீடாகக் காண்பிக்க வேண்டிய ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுத் தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பிணை வைப்பு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) நிகழத்தக்க பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளில் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் செயற்படுத்தப் பட்டிருந்த குளச் செயற் திட்டங்களுக்கு உரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,245,707 பெறுமதியான தொகை மற்றும் அதற்காக 2012 மார்ச் மாதம் 01 ஆம் திகதியின் பின்னர் தோன்றும் சட்ட ரீதியான வட்டி ஆகியவை நிகழத்தக்க பொறுப்புக்களாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | வழக்கு தினம் 2020.10.12 ஆன படியால் சட்டத்திற்குட்பட்ட வட்டி மற்றும் தவணைப் பணத்தைக் கணக்கிடுவது சிக்கலாக உள்ளது. |

(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையிலிருந்த வீதவரி அட்டவணைக்கு ஏற்ப ரூபா 3,471,153 பெறுமதியான தொகையாகவும், வீதவரி ஆவணத்துக்கு ஏற்ப ரூபா 2,425,881 பெறுமதியான தொகையாகவும் இருந்ததோடு, வீதவரிக்காக பயன்படுத்தப்படும் மென்பொருளின் பிரகாரம் ரூபா 5,195,243 பெறுமதியான தொகையாகவும் இருந்தது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உப ஆவணங்களுக்கு ஏற்ப செலுத்தப்பட்ட வீதவரி மீதி ரூபா 27,755 பெறுமதியான தொகையாகக் காணப்பட்ட போதிலும் ஐந்தொகையில் ரூபா 135,629 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 107,874 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் திரண்ட நிதி மற்றும் முன்பதியப்பட்ட மீதி பேரேட்டுக்கு இணங்க ரூபா 228,552,457 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் ரூபா 134,331,585 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 94,220,872 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் தொகை உப ஆவணங்களுக்கமைய ரூபா. 3,837,733 ஆகவும் ஐந்தொகையில் ரூபா 3,752,315 ஆகவும் ஊழியர் ஆவணங்களுக்கமைய ரூபா 3,738,982 ஆகவும் காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உப ஆவணங்களின் தொடக்க மீதி பிழையாகியுள்ளது. |
| (v) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் வைப்பு ஆவணங்களுக்கு இணங்க பெறுமதி ரூபா 210,000 தொகையுடைய 03 கணக்குகள் நிதிக்கூற்றுகளில் ரூபா 1,902,295 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 1,692,295 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்த வைப்புகள் மற்றும் இறைச்சிக் கடை பிணை வைப்பு ஆகியவை வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளன. வைப்பு ஆவணத்தில் காணப்படும் ரூபா 17,789 பெறுமதியான மீதியானது 07 ஆண்டுகளாக தொடர்ந்து வருவதோடு அதை இனங்காண முடியவில்லை. |
| (vi) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இருப்பு நிலைக் குறிப்பின் நிகர சொத்துக்களின் பெறுமதி ரூபா 230,032,607 தொகையாக இருந்த போதிலும், உரித்துடைய பெறுமதி ரூபா 134,331,585 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 95,701,022 தொகையால் சமமற்றுக் காணப்பட்டன. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஈ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் இருந்து நிதிக்கூற்றுகளில் திரண்டிருக்கும் ஆண்டுக் கணக்கிடையே பரிமாற்றமாகக் | அதைப் பற்றி தேடிப் பார்த்து கணக்குகளில் தேவையான | (i) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கணக்குகளிடையேயான பரிமாற்றம் 1130292 |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,130,292 பெறுமதியான தொங்கல் கணக்குகளின் மீதி குறித்து தேடிப் பார்த்து தேவையான பொருத்தங்களைச் செய்யாமல் மீளாய்வாண்டில் ஏட்டுக் குறிப்புகள் மூலமாக திரண்ட நிதிக்கு இணங்கச் செய்யப்பட்டிருந்தது. | இணக்கங்களைச் செய்து தொங்கல் கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். | பணத்தொகை பொதுக் கணக்கிலிருந்து செலுத்தப்பட வேண்டிய தொழில் ஒன்றுக்காக தொழில் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் பொதுக் கணக்கில் காசோலையொன்றை எழுதி நிர்மாணத் தொழில் கணக்குக்கு இடப்பட்டுள்ளது.<br><br>(ii) தேறிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளிடையே 95701022 வேறுபாடுள்ள தொங்கல் கணக்கு மீதியை எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(உ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------

(i) கிடைக்க வேண்டிய கணக்குகள்

----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளைக் கடந்தும் அறவிடப்படாமல் காணப்படும் 02 கிடைக்க வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 65,960 தொகையாக காணப்பட்டது. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பண ஒப்பந்தம் மற்றும் முற்பணம் ஆகியவற்றைக் கண்டறிய முடியவில்லை. |

(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாமல் காணப்படும் செலுத்த வேண்டிய கணக்குகள் 02 இன் பெறுமதி ரூபா 965,926 தொகையாக காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்தாத ஓய்வூதியம் மற்றும் அருட்கொடைகள் ஒவ்வொரு ஆண்டிலும் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் படி அரையாண்டுக்கு ரூபா 50,000 பணத் தொகை செலுத்தப்படுகிறது. முத்திரை வரி ரூபா 292,928 க்கான பணத்தை 2020 ஆம் ஆண்டில் செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஊ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 202,250,694 பெறுமதியான 08 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு | | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுகளில் பக்க இலக்கம் 111 இலிருந்து 126 வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | | |
| | (i) விதி 59 | | 2019 ஆம் ஆண்டிற்காக கைத்தொழிகள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பாக ஆய்வொன்று நடத்தப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் சம்பந்தமாக ஆய்வொன்றை நடத்தி ஆவணமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அதில் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | விதி 65 | | கைத்தொழில் மற்றும் வியாபார வரிகளைச் செலுத்துவதற்கான கால எல்லை முடிவில் செலுத்தாமல் தவிர்ப்பவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வியாபார வரி செலுத்துவதற்கான கால எல்லையின் முடிவில் செலுத்தாமல் தவிர்ப்பவர்களின் பெயர் பட்டியல் சபையினுள்ளே பேணப்பட எழுத்து மூலமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | விதி இல 99 | 4,135,029 | 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து நவம்பர் வரையான 56 பற்றுச்சீட்டுகளுக்கு முறையான ஒப்புதல் மற்றும் உறுதிப்படுத்தல்கள் இல்லாமல் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | பிரதேச சபை விதிகள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iv) | விதி 168(1) | | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகள் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | விதிகள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (v) | விதி 217 மற்றும் 218 | | சபைக்குரிய இடங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பி.ச.46 மாதிரி பிரகாரம் ஆவணமொன்று பேணப்படாததோடு அனைத்து இடங்கள் மற்றும் கட்டிடங்களை ஆண்டுக்கு ஒரு தடவையாவது பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(இ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்
------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 1645 | | சபையின் வாகனங்களுக்கு உரிய மாதாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் | நிதிப்பிரமாணத்துக்கு அமைய நடவடிக்கை | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சாராம்சங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (ii) | 1647(உ) | வாகனப் பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகன பதிவேடொன்று பேணப்பட்டு வருகிறது. |

2. நிதி மீளாய்வு
------------------------

2.1 நிதி விளைவுகள்
------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,063,934 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,769,582 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்
----------------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,064,067 | 2,448,142 | 5,003,790 | 3,512,229 | 2,072,920 | 2,433,317 | 2,024,217 | 5,387,865 |
| (ii) | வாடகை | 6,440,000 | 5,037,031 | 1,498,739 | 4,998,431 | 5,557,250 | 5,410,420 | 5,666,955 | 95,770 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் சேவைகள் | 3,380,900 | 5,133,905 | 1,595,755 | 5,283,155 | 5,331,000 | 4,546,902 | 4,389,652 | 157,250 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,671,000 | 9,638,588 | 4,304,239 | 10,431,920 | 3,158,000 | 7,104,001 | 2,155,270 | 7,271,827 |
| | | 18,555,967 | 22,257,666 | 9,211,013 | 24,225,735 | 16,119,170 | 19,494,640 | 14,236,094 | 12,912,712 |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் சேகரிக்கப்பட்டிருக்க வேண்டிய மொத்த வருமானம் ரூபா. 35,170,378 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தில் நூற்றுக்கு 69 வீதமான ரூபா. 24,225,735 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. | சபை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

2.2.3 வீத வரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் வீதவரிகள் அறவிடப்பட வேண்டிய பகுதிகளை இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்திருக்கவில்லை. | வீதவரிகள் அறவிடப்பட வேண்டிய பகுதிகளை இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்க வேண்டும். | கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் வளர்ச்சியடைந்த பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், பண்டைய காலத்திலிருந்து வீதவரிகள் அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| (ஆ) | மீளாய்வாண்டின் வீதவரிகளை அறவிடுதல் 2014 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் நடத்தப்பட்டிருந்தோடு உரிய ஆண்டின் பின்னர் புதிய நிர்மாணங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பாக தற்காலிக மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய நிர்மாணங்கள் மற்றும் மாற்றங்களை இனங்கண்டு தற்காலிக மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டு வீதவரிகள் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | நிலுவை வீதவரிகள் தொடர்பாக கால பகுப்பு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலுவை வீதவரிகள் தொடர்பாக கால பகுப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஈ) | வீதவரி தெளிவான அலகுகள் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி தெளிவான அலகுகள் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2014 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் பட்டியலிடுவது ரூபா 1,857,782 ஆக இருந்ததோடு 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை ரூபா 3,469,479 ஆக இருந்தது. எனினும், வீதவரி ஆவணத்துக்கு ஏற்ப நிலுவை ரூபா 5,387,865 ஆக இருந்தது. | சரியாக நிலுவை வீதவரிகள் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டும். | நிலுவை மீதி ரூபா 2,425,881 என்பதை உறுதிப்படுத்துகிறேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்களுக்காக துணை விதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) பணிகளைப் பூர்த்தி செய்வதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,250,000 பெறுமதியான 08 செயற்திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை உரிய காலத்துக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். மேற்பார்வைக்காக செயற்திட்டம் தொடர்பான அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முதல் கட்டத்தில் 15% உம், இரண்டாம் கட்டத்தில் 10% உம் வெட்டப்பட்டிருந்தன. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மீளாய்வாண்டில் சபை அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பாக தற்போது பிரதேச சபையினால் செயற்படுத்தப்படுவதோடு எமது விடயங்கள் தொடர்பான விஷேட பயிற்சி வருங்காலத்தில் நடத்தப்படவிருப்பதாக உள்ளூராட்சித் திணைக்களத்தால் அறியத் தரப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் 12 வாகனங்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களுக்காக 2007 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதிக்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்படாத காரணத்தால் மிதமிஞ்சிய தொகையாக ரூபா 18,486 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அரையாண்டு அறிக்கையைத் தாமதப்படுத்தலைச் செய்த மற்றும் கொடுப்பனவை அனுமதித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | ஊழியர் சேமலாப நிதிக்கு அனுப்பப்பட வேண்டிய அரையாண்டு அறிக்கை தாமதமானதால் தாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று அறியத் தரப்பட்டுள்ளது. |

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.3.1 கைப்பற்றப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையினால் உபயோகப்படுத்தப்படும் ரூபா 76,322,855 பெறுமதியான 18 | வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1999 - 2000 ஆம் ஆண்டுகளில் பிரதேச சபையால் செயற்படுத்தப்பட்ட குள வழக்கு அறிக்கைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஏற்ப பிரதேச சபையில் உள்ள சொத்துக்கள் ஏலமிடப்பட்டுள்ளன. இந்தக் கொடுப்பனவு நடவடிக்கைகள் இன்னும் முடிவடையாத காரணத்தால் இந்த சொத்துக்கள் இதுவரையில் பிரதேச சபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிதைவுற்றுக் காணப்படும் கடையொன்றைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்காமையால் குத்தகைக்கு வழங்க முடியாமல் இருந்தது. | தேவையான பழுதுபார்த்தல்களைச் செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த இடம் நவீன வசதிகளைக் கொண்ட கடைகளை நிர்மாணிப்பதற்கு அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரூபா 1,322,000 பெறுமதியான வாகனங்கள் 02 செயலற்ற நிலையில் காணப்பட்டன. | பழுது பார்த்து பாவனைக்கு எடுக்க அல்லது அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வாகனம் பழுதுபார்க்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. 149/6438 உடைய மோட்டார் சைக்கிள் குள செயற்திட்டம் தொடர்பாக நீதிமன்றத்தால் வழக்குப் பண்டமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | ரூபா 3,452,403 பெறுமதியான நீர் குழாய் அமைப்புகள் 05 ஆண்டுகள் கடந்தும் உபயோகமற்றுக் காணப்பட்டன. | நீர் குழாய் அமைப்புகளை பயனுள்ள விடயங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | இந்த நீர் குழாய் அமைப்புகளில் எஞ்சியுள்ள குழாய்களை அரச கணக்குகள் செயற்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3.3 வருடாந்த பொருட்கள் / இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் பொருட்கள் மெய்மையாய்வுக்கு ஏற்ப பட்டியலிடப்பட்ட ஆவணங்களில் இல்லாத பொருட்கள் 102 இனங்காணப்பட்டன. அவ்வாறே 2014 மற்றும் 2016 ஆம் வருடங்களில் செய்யப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் மெய்மையாய்வு பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். பொருட்கள் கிடைப்பது மற்றும் வினியோகிப்பது சரியாக குறித்து வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.4 பெறுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பெறுகை வழிகாட்டல் கையேட்டின் 6.2.2 உப பிரிவின் பிரகாரம் மனுக்கோரல் தேசிய போட்டியின் குறைந்தபட்ச கால எல்லை 21 நாட்கள் என்ற போதிலும் 2019 ஆம் ஆண்டில் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கான மனுக்களை வழங்க 16 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல் கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகை வழிகாட்டல் கையேட்டின் 6.2.2 உப பிரிவின் பிரகாரம் செயற்பட முடியாமல் போனது உரிய வர்த்தமானி அறிவித்தலுக்கு மா நகர சபையின் அனுமதியைப் பெற முடியாமல் தாமதமான காரணத்தால் ஆகும். |
| (ஆ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதியிட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 1980/46 உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகள் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பெறுமதி மதிப்பிடப்பட வேண்டும் எனினும் 35 கடைகள் பெறுமதி மதிப்பிடப்படாமல் குறைந்த கேள்விப் பெறுமதி தீர்மானிக்கப்பட்டு விலைமனுக் கோரப்பட்டிருந்தன. | கடைகள் மதிப்பிடப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (இ) | ரூபா 24,000 குறைந்த கூறுவிலை பெறுமதியான 08 கடைகள் விலைமனுக் கோரப்படாமல் சபை தீர்மானத்துக்கு ஏற்ப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | கடைகளை குத்தகைக்கு விடுவதில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------

உள்ளகக் கணக்காய்வு

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| -------------------------------- | -------------- | ---------------------------- |
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதியிட்ட இலக்கம் 04/2015 உடைய சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உடனடியாக பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரை நியமித்து கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |